# November 5, 2025- தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குருநானக் தேவின் 556-ஆவது பிறந்தநாள் வழிபாட்டில் பங்கேற்பதற்காக, இந்தியாவைச் சேர்ந்த சுமார் 2,100 சீக்கிய யாத்ரீகர்கள் வாகா எல்லை வழியாக பாகிஸ்தானுக்குச் சென்றனர்.
   i. குருநானக் தேவ் பிறந்த இடம் மற்றும் சீக்கிய மதத்தின் முக்கியத்துவம் வாய்ந்த குருத்வாராக்கள் இந்திய பிரிவினைக்குப் பிறகு இன்றைய பாகிஸ்தானுக்குள் அமைந்துவிட்டன. இந்நிலையில் குருநானக் ஜயந்தியையொட்டி இப்போதைய புனிதப் பயணங்கள் தொடங்கியுள்ளன.
   ii. பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து கடந்த மே மாதத்தில் இந்தியா-பாகிஸ்தான் இடையே நடந்த 4 நாள்கள் மோதலுக்குப் பிறகு இரு நாடுகளுக்கும் நடைபெறும் முதல் மக்கள் தொடர்பு நிகழ்வு இதுவாகும்.

2. சட்டவிரோத ஆட்சிக் கவிழ்ப்பு வழக்கில் விசாரிக்கப்பட்டவரும் தென் அமெரிக்க நாடான பெருவின் முன்னாள் பிரதமர் பெட்ஸி சாவேஸுக்கு மெக்ஸிகோ அடைக்கலம் அளித்ததால், அந்த நாட்டுடனான தூதரக உறவுகளை முறிப்பதாக பெரு அரசு அறிவித்தது.
   i. கடந்த 2022-இல் அப்போதைய அதிபர் பெட்ரோ காஸ்டிலோ அவசரநிலை அறிவித்து, நாடாளுமன்றத்தைக் கலைக்க முயன்றார். தோல்வியடைந்த முயற்சியில் சாவேஸ் பங்கேற்றதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இந்த வழக்கில் இருந்து அவரைப் பாதுகாக்கவே பெருவில் உள்ள தங்களின் தூதரகத்தில் சாவேஸுக்கு அடைக்கலம் அளிக்கப்பட்டுள்ளது.

3. அமெரிக்க வரலாற்றில் மிகவும் செல்வாக்கு மிக்க துணை அதிபர்களில் ஒருவரான டிக் சேனி (84) உடல்நலக் குறைவு காரணமாக மரணமடைந்தார்.
   i. அமெரிக்க முன்னாள் அதிபர் ஜார்ஜ் ஹெச் டபிள்யு. புஷ், அவரது மகன் ஜார்ஜ் டபிள்யு. புஷ் ஆட்சிக் காலங்களில் டிக் சேனி முக்கிய பொறுப் புகளை வகித்தார். வளைகுடா போரின் போது பாதுகாப்புத் துறை தலைவராக ஆயுதப்படைகளை வழி நடத்தியவர்; பின்னர் ஜார்ஜ் டபிள்யு புஷ் அதிபராக இருந்தபோது துணை அதிபராக பொறுப்பு வகித்தார்.
   ii. நியூயார்க் இரட்டை கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு அதிபர் புஷ் எடுத்த மிக முக்கியமான முடிவுகளை செயல்படுத்திய அவர், சில சமயங்களில் தனக்கு அதிக ஆர்வமான விவகாரத்தில் சுயமாகக் கட்டளையிடும் அதிகாரத்துடன் செயல்பட்டதாகக் கூறப்படுகிறது.

4. அமெரிக்காவின் நியூயார்க் நகர மேயர் தேர்தலில் போட்டியிடும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஸோரான் மம்தானிக்கு வெற்றி வாய்ப்புகள் அதிக மிருப்பதாக கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.
   i. நியூயார்க் நகர மேயர் மட்டு மின்றி, நியூஜெர்ஸி மற்றும் வர்ஜீனியா மாகாணங்களின் புதிய ஆளுநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அமெரிக்காவில் நடைபெறுகிறது. இந்திய நேரப்படி புதன்கிழமை அதிகாலை 6.30 மணிக்கு இந்தத் தேர்தல்களுக்கான வாக்கெடுப்பு நிறைவடைகிறது.
   ii. அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்ற தற்குப் பிறகு நடைபெறும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல்களாக இவை கருதப்படுகின்றன. இந்தத் தேர்தலின் முடிவுகள்,

டிரம்ப் அரசின் நடவடிக்கைகள் குறித்த மக்களின் மனநிலையைக் காட்டும் கரு வியாகக்கருதப்படுகிறது.

5. ஆசியாவில் முன்னணியில் உள்ள கல்வி நிறுவனங்களில் சென்னை ஐஐடி 70-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

i. இது தொடர்பாக பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள உலகளாவிய உயர்கல்வி பகுப்பாய்வு நிறுவனமான குவாக்கரெல்லி சைமன்ட்ஸ் (க்யூஎஸ்) வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டதாவது: ஆசியாவில் உள்ள 100 முன்னணி கல்வி நிறுவனங்களில் தில்லி ஐஐடி, சென்னை ஐஐடி, மும்பை ஐஐடி, கான்பூர் ஐஐடி, கரக்பூர் ஐஐடி ஆகியவை இடம்பெற் றுள்ளன.

ii. க்யூஎஸ் தரவரிசைப்படி, ஆசியாவில் உள்ள 100 முன்னணி கல்வி நிறுவனங்களில் முதலிடத்தில் ஹாங்காங்கில் உள்ள ஹாங் காங் பல்கலைக்கழகம் உள்ளது.இதைத் தொடர்ந்து சீன தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள பீக்கிங் பல்கலைக்கழகம் 2-ஆவது இடத்தில் உள்ளது. சிங்கப்பூரில் உள்ள நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், அந்நாட்டில் உள்ள தேசிய சிங்கப்பூர் பல்கலைக்கழகம் ஆகியவை 3-ஆவது இடத்தைப் பகிர்ந்துள்ளன. தரவரிசையில் 4-ஆவது இடம் குறிப்பிடப்படாத நிலையில், சீனாவின் ஷாங்காய் நகரில் உள்ளஃபுடான் பல்கலைக்கழகம் 5-ஆவது இடம்பிடித்துள்ளது.

iii. தில்லி ஐஐடி 59-ஆவது இடத்திலும், சென்னை ஐஐடி 70-ஆவது இடத்திலும், மும்பை ஐஐடி 71 ஆவது இடத்திலும் உள்ளன. கான்பூர் ஐஐடி மற்றும் கரக்பூர் ஐஐடி 77-ஆவது இடத்தைப் பகிர்ந்துள்ள்ளத்தி பாமா அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் 111 இடங்கள் முன்னேறி 262-ஆவது இடத்தைப்பிடித்துள்ளது.

6. ஐசிசி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் பேட்டர்கள் பிரிவில், இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா முதலிடத்தை இழந்தார். அவரை பின்னுக்குத் தள்ளி, தென்னாப்பிரிக்காவின் லாரா வோல் வார்ட் அந்த இடத்துக்கு வந்துள்ளார்.

7. இந்தியா மற்றும் இஸ்ரேல் இடையே ஏற்கெனவே வலுவாக உள்ள உத்திசார் கூட்டுறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், இரு நாடுகளும் ஒரு முக்கியமான பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.

i. இரு நாடுகளும் அதிநவீன தொழில்நுட்பங்களைப் பகிர்வதற்கும், முக்கிய ஆயுத அமைப்புகள் மற்றும் ராணுவத் தளவாடங்களை இணைந்து தயாரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும்.